சிவமயம்

Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே,

புத். ருகூ] யாழ்ப்பாணம்—சர்வசித்துஸு வைகாசிமீ கூ௳ (1947 மே 23 வெள்ளிக்கிழமை) [இல கச

## நான் பெற்ற இன்பம்

வித்துவான், G சுப்பிரமணியபிள்ளை, M. A., B. L.

நான்கூட சிலகாலமாய் அப்படித்தான் எண்ணினேன். எப்படியெனின் மதம் சமயம் என்று மக்கள் ஏன் அடித்துக்கொள்ளவேண்டும்? சமயம் என்றால், அது மனிதனுக்கும் கடவுளுக்குமிடையே நிகழும் ஒரு தொடர்புதானே. அதைப்பற்றி மற்றவர்கள் அல்லற்படுவானேன்? எனக்கு அடுத்துள்ளவன் எம்மதத்தினனாய் இருந்தால் எனக்கு என்ன வந்தது? அவன் மனதுக்குப் பட்டது மேல். அவன் அதுபோல் வாழ்கிறான் என் மனம்போல் நான் வாழ்கிறேன், ஆங்கிலக் கவி பைரன் கூட ("I Speak not of Religion; for it lies between man and-God") "நான் மதத்தைப்பற்றிப்பேசவில்லை; அது மனிதனுக்கும் கடவுளுக்கும் தனியே உள்ளது" என்று சொல்லவில்லையா? இவ்வாறெல்லாம் நான் எண்ணியதுண்டு. பலரும் எண்ணுகின்றனர். இதைச் சிறிது ஆராய்ந்து தெளிவோம்.

### 1. ஈசன் எனும் கனி

இதோ அப்பர் அடிகள் இருக்கிறார். அவரையே எடுத்துக்கொள்வோம்; சிவநெறி நீங்கி அவநெறியடைந்தார் அங்கேபோனார், இங்கே போனார், அதை விடுத்தார், இதைப் பிடித்தார், படுக்கையிற் படுத்தார், சிவன் அருள் கொடுத்தார், பாமாலை தொடுத்தார், பேரின்பம் பெற்றார், சரி, அதோடு நிற்கவேண்டியதுதானே! அவ்விதம் அமையாது, அனைத்து மக்களையும் அவர் அறை கூவி அழைப்பானேன்? பழம் கொடுக்கிறேன், வாருங்கள் என்று அழைக்கிறார். ஓகோ! பழமானால் வாங்கித்தின்னலாம் என்று பக்கத்தில் போனால், அதுதான் இல்லை. "இது கடையில் விற்கிற பழம் பொருள் இல்லை.. உங்கள் வாழ்க்கைக் கடையில் விற்கிற பழம்பொருள். ஆனால் மிகவும் இனிக்கிறது' என்கிறார்.

"மனிதர்கா ளிங்கே
  வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி
  யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல்
  ஈச னெனுங்கனி
இனிது சாலவு
  மேசற் றவர்கட்கே."

அப்பருக்கு எந்த பழம் கிடைத்ததாம். பாவம்! உலகம் தெரியாத மனிதர்! கிடைத்ததைச் சுருட்டி அப்படியே விழுங்காமல், எல்லோரையும் அழைத்து உண்ணச்சொல்கிறார், யாராவது இப்படிச் செய்வார்களா? மேலும், என்ன பழமாம் தெரியுமா? வேப்பம்பழம், பனம்பழமாய் இருந்தாற்கூட மக்கள் வாங்கியுண்ண ஓடோடியும் வருவார்கள். ஏனெனில், எதுவாய் இருந்தாலும் போட்டுத் தொந்தியை நிரப்பலாமல்லவா? வயிற்றுப் பசி, உடலின் வேட்கையைத் தீர்ப்பதாயிருந்தால், கூடை கூடையாய் வாங்கிப்போக மனிதர் உண்டு. ஆனால், அப்பர் கொடுப்பது சிவப்பழம். உடலின் பசிக்கு உதவாது, உயிரின் பசியைத் தணிக்கும் ஆன்ம வேட்கையை அவிக்கும். ஆமாம், ஆன்ம உணர்ச்சி உண்டாகியல்லவா, பிறகு ஆன்ம வேட்கையைப்பார்க்கவும்தீர்க்கவும்வேண்டும்? அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை அரனுக்களித்த அப்பர் அடிகளுக்கு அவ்வுண்மை தெரிந்தது, அதைத் தெரியாத பிறரை ஏன் அவர் வாய் வலிக்க வலிந்து அழைக்கிறார்?

அப்பர் கனியைக் கையில் வைத்துக்கொண்டு இன்னொரு வேடிக்கையும் காட்டுகிறார். அது எப்பொழுதுமே யாருக்கும் ஓர் இயல்பான வழக்கம்போலும்! நமது கையிலுள்ள தின் பண்டத்தைக் குழந்தைக்குக் கொடுக்கும்பொழுது உடனே கொடுத்துவிடுவதில்லை. சும்மா அழைத்தால் குழந்தை நம்மிடத்திற்கு வராது. கையிலுள்ள பண்டத்தைக் காட்டி அழைக்கிறோம். அது சிரித்த முகத்துடன் கையை நீட்டிக்கொண்டே வருகிறது. அருகில் வந்ததும் அதைப் பிடித்துநிறுத்திக்கொண்டு, நாம் விரும்புவதுபோல,'நீ ஆடு, அல்லதுபாடு, அல்லது ஒரு கதை சொல், அல்லது ஒரு முத்தம கொடு, அல்லது பாட்டியின் வாய் எப்படியிருக்கிறதென்று காட்டு, அப்பொழுதுதான் தின்னக் கொடுப்பேன்" என்றுகெஞ்சுகிறோம். குழந்தையை ஏவுவதற்கு அதுதான் ஏற்ற சமயம். பண்டத்தைக் கொடுத்துவிட்டால். பிறகு அது நாம் சொன்னபடி கேளாது. பண்டத்தைக் காட்டியே அதை நாம் கேள்விகள் கேட்கிறோம்; ஏவல் வாங்குகிறோம். அதுபோல் நம்மையும் குழந்தைகள் ஆக்கிவிடுகிறார் அப்பர் அடிகள்.

அவர் நம்மை ஒரு கேள்வி கேட்கிறார். வேடிக்கையான கேள்வி! "கனி தந்தாற் கனியுண்ணவும் வல்லிரே" என்பதுதான் அவர் கேள்வி. கனி கொடுத்தால் யாராவது வேண்டாம் என்பார்களா? இதையும் ஒரு கேள்வி என்று கேட்கிறாரே என்று நாம் நினைக்கலாம். கனி மிகவும் நல்லதுதான். ஆனால் நல்லனவற்றையெல்லாம் மக்கள்விரும்பி ஏற்றுக்கொள்கிறார்களா? தீயனவற்றில் மனம் நாடுவதுபோல் நல்லனவற்றில் நாடுவதில்லை. மக்கள் நல்லனவற்றையெல்லாம் விரும்பிஏற்றுக்கொள்வதாய் இருந்தால் இப்பொழுதுள்ள உலகமே மாறியிருக்கும். அதை நன்கு தெரிந்துதான் அப்பர் அடிகள் சந்தேகத்துடன் இந்தக் கேள்வியை விடுக்கிறார்.

இன்னொன்றும் உண்டு. கனி தந்தால் வாங்கிக்கொள்வீரா என்று அவர்கேட்கவில்லை. உண்ணமுடியுமா என்று கேட்கிறார். 'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி. தொகுத்தார்க்குந் துய்த்தலரிது". எடுத்து வைத்தாலும் கொடுத்துவைக்கவேண்டும். கைக்கு எட்டினது வாய்க்குஎட்டாமற் போதலுங்கூடும். காரைக்காலம்மையார் விரும்பித் தருவித்த இரண்டாவது மாங்கனி அவர்களின் கணவனுக்குக் கிட்டாது போனது

தொடர்ச்சி 6ம் பக்கம்

## வெற்றி கிடைத்தது

### கல்வி மந்திரியின் மகிழ்ச்சி

சென்ற திங்கட்கிழமை யன்று பாலடன் கோறளையில் உள்ள யத்த தோவா என்னும் கிராமத்தில், கல்வி மந்திரி மிஸ்ரர் கனங்கரா, கல்விச்சட்டத் திருத்த விஷயமாகத் தான் அடைந்த வெற்றியைப்பற்றிப் பின் வருமாறு கூறினார்:

"செல்வர் குழுவும், முதலாளி வர்க்கமும் இலவசக்கல்வித் திட்டத்தைப் பாழ்படுத்த ஓர் பெரிய போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டத்தைத் தன்னந்தனியே நின்று எதிர்த்து வெற்றியும் பெற்றேன். கல்விச்சட்டம் சென்றவாரம் அரசாங்கசபையில் விவாதத்துக்கு வந்தபோது, அதனை முன்னர்எதிர்த்தவர்கள் அனைவரும அப்படியே பதுங்கிவிட்டனர். ஏன்? அவர்கள் இனியும் பிடிவாதமாக இருந்து இந்தச் சட்டத்தை எதிர்த்தால், பொது ஜனங்கள் என்ன செய்வர் என்பதை அறிந்து, மூலைக்குமூலை பதுங்கிவிட்டார்கள்.

"இப்போது இந்தச் சட்டத்தை அரசாங்கசபையின் நிருவாகசபை ஒன்று ஆராய்ந்துவருகிறது. அதிலும் எவ்விதமாற்றமோ, திருத்தமோ இல்லாமல் இம்மசோதா வரவேண்டும் என்பதே எனது பிரார்த்தனை."

## ஒழுக்கம்

### பாடசாலைகள் சீர்கேடு

'எங்கள் நாட்டில் இன்று குற்றங்கள் வளர்கின்றன. இதற்குக் காரணமென்ன? மக்களிடையே நல்லொழுக்கமில்லாமையே இதன் மூலகாரணமாகும். சிறுவயதில் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தையூட்டி வளர்க்க வேண்டிய பாடசாலைகளே இன்று ஒழுக்கமின்மை, கட்டுப்பாடின்மை என்பவற்றுக்கு நிலைக்களனாக விளங்குகின்றன"

என்றிவ்வாறு கழுத்துறை வித்தியாதரிசியான மிஸ்ரர் டீ ஏ. ஜெயசிங்ஹ என்பவர் சென்றவாரம் நிகழ்ந்த சிங்கள ஆசிரியர் கூட்டம் ஒன்றிற் கூறினார். இன்னும் அவர் கூறியதாவது:

"இன்று இலங்கை, உலகில் மிகக் குற்றம் மலிந்தநாடு என்று ஓர் பெயரைச் சம்பாதித்துவிட்டது. முற்காலத்திலே பள்ளிக்கூடங்கள் யாவும் ஒழுக்கநிலைக்களன்களாக இருக்கின்றன. ஆனால் இன்று நாம் காண்பதென்ன? கட்டுப்பாடின்மை, ஒழுங்கீனம், ஒழுக்கவீனம் என்பவற்றுக்குத் தாயகமாகப் பாடசாலைகள் விளங்குகின்றன."

## ஆரம்பமானது!

### ஐ. தே. க. பிளவு

— (ஸ்ரீதரன்) —

ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னரேயே அதோகதி யடைந்துவிடும் என்றும், தேர்தல் முடிந்ததும், இங்குள்ள அரசியற் கட்சிகள் யாவும் மறைந்துவிட, பதவிவேட்டுவர் கட்சி என்ற ஒன்றுதான் மீந்திருக்கும் என்றும் இலங்கை அரசியல் விஷயமான ஆராய்ச்சியாளர் பலர் கூறிவந்தனர். அவர்களுடைய கூற்று மாத்தறை விஷயத்தில் இப்போது உண்மையாகிவிட்டது.

மாத்தறைத்தொகுதிக்கு, அந்நகர சபையின் தலைவரான மிஸ்ரர் வில்பிரட் குணசேகரா என்பவரும், இப்போது தொழில் மந்திரியாயிருக்கும் ராஜா ஹீவவித்தாரணை என்பவரும் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராக முன்வந்தனர்.

'ஒரு தொகுதியில் முன்வரும் அபேட்சகர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்திருப்பின் அதில் எவரையாவது தெரியாமல் அவர்கட்கிடையே போட்டி நடக்க விடுவது என்று முன்னர் ஐக்கிய தேசியக்கட்சி நிருவாகசபை தீர்மானித்தது. ஆனால், மாத்தறை விஷயத்தில் குறித்த இருவர் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாகவிருந்தும், ஐக்கிய தேசியக்கட்சி நிருவாகசபை தம்மைப் புறக்கணித்து, மிஸ்ரர் இராஜா ஹீவவித்தாரணையைத் தெரிவு செய்தமை, மிஸ்ரர் வில்பிரட் குணசேகராவிற்கு ஆத்திரத்தைக் கொடுத்துவிட்டது.

ஐக்கியதேசியக்கட்சி அடாத்தான கருமத்தைச் செய்திருக்கிறதென்றும் இப்படிப் பட்சபாதகமான செயல் கட்சி ஒழுங்குக்கு முற்றும் மாறானதென்றும், மிஸ்ரர் குணசேகரா பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்து ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து விலகி, ஓர் சுயேச்சை வாதியாகத் தாம் மாத்தறைத் தொகுதிக்குப் போட்டியிடத் தீர்மானித்துவிட்டார்.

### இந்திய பிரபலவிரிவுரையாளர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகிய டக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் M. A., Ph D., அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் இவ்விழாவெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலய மண்டபத்தில் 15-6-47 ஞாயிற்றுக்கிழமை காலையிலும் மாலையிலும் நடைபெறும்.

ஈழநாட்டிலுள்ள சிலஅறிஞர்களும் இவ் விழாவிற் பங்கு பற்றுவார்கள் என்று அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
வைகாசிமீ கூஉ வெள்ளிக்கிழமை

## புடைவைக் கட்டுப்பாடு விரைவில் நீங்குமா?

புடைவைக் கட்டுப்பாட்டுக் கூப்பனில்நான்காவது அயனத்திற்குரிய கூப்பனையும் உபயோகிக்கலாகுமென இப்பொழுது கட்டுப்பாட்டதிகாரிகள் அநுமதி செய்துவிட்டார்கள்; புடைவை வகையில் இங்குள்ள மக்களின் உபயோகத்திற்காகிய நல்ல சேலைகள் வேட்டிகள் கிடைத்தலரிதெனினும், சாயம் போய்ப் பண்பு மாறக்கூடிய சேலைகளும், நீடித்த காலம் உபயோகிக்க முடியாத வேட்டிகளும் இப்பொழுதும் அதிக விலைக்குக் கிடைக்கலாயின. கூப்பனுக்கும் ஒருவிலை விதித்து அவ்விலைக்குப் பணத்தைப் பெற்றுக்கொண்டு புடைவையின் விலையையும் விதித்து வாங்கிக்கொண்டுதான் பெரும்பாலும் புடைவை வியாபாரிமார் புடைவை வியாபாரத்தை இந்த வட இலங்கையிலே இப்பொழுது செய்துவரக் காண்கின்றேம். கூப்பனில்லாமற் பெறக்கூடிய துணிகளும் இப்போது கடைகளிலுள்ளன; எப்படியிருந்தாலும் புடைவையின் விலை முன்னரைக் காட்டிலுஞ் சிறிதேனுங் குறைந்ததாகக் காணவில்லை; புடைவைப் பஞ்சமும் இருந்தபடியேதான் இருக்கின்றது; விஷயம் இப்படியிருக்க புடைவை விஷயமான கட்டுப்பாட்டை விரைவில் ஒழித்துவிடுதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றனவென அறியலானேம்.

புடைவைக் கட்டுப்பாட்டதிகாரியாகிய மிஸ்ரர் M. F. de. S. ஜயரத்தின வென்பவர் சிலகாலத்திற்கு முன்னர் புடைவை விஷயமாக யப்பானுக்குச் சென்று மீண்டுவந்து இருபது லட்சம் யார்கொண்ட வெள்ளைத் துணி யப்பானில் ஏற்றுமதியாகி விரைவில் இலங்கைக்கு வந்து சேருமென்று தெரிவித்துள்ளார்; இன்னும் 40 லட்சம்யார் கொண்ட காரிக்கன் துணி இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும்வண்ணம் யப்பானில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறதெனவும், ஆனல் அத்துணி அழுத்தஞ் செய்யப்படும் பொருட்டு இங்கிலாந்திற்கு அனுப்பி அங்கே அழுத்தஞ்செய்து விலையுங் குறிக்கப்பட்டபிறகுதான் இங்கிலாந்திலிருந்து இங்குவந்து சேருமெனவுந் தெரிவிக்கின்றார்.

ஆனற் பொருள் விலைக் கட்டுப்பாட்டு நிர்வாகசபையார், குறித்த துணியை இங்கிலாந்திற்கனுப்பி அங்கே சொல்லப்பட்ட கருமங்கள் செய்து மீட்டு இலங்கைக்கு ஏற்றுமதி செய்து அது வந்து இங்கேசேர வெகுகாலஞ் செல்லுமென்றும், விலையும் அதிகப்படுமென்றும் ஆனதால் அழுத்தமிடாமல் அத்துணியை யப்பானிலிருந்து நேரே இலங்கைக்கு அனுப்பி வைப்பதுதான் உசிதமாகுமென்றும் யோசித்து, இவ் விஷயத்தை யப்பானிலுள்ள அமெரிக்க அதிகாரிகளோடு ஒழுங்கு செய்யும்படி மிஸ்ரர் ஜயரத்தினவிடம் கேட்டிருக்கிறார்கள்; இந்த ஒழுங்கு சரிவருமானல் இலங்கைக்கு இப்போதைக்குப்போதிய துணி ஒருவாறு வந்து சேருமெனநாம் காத்திருக்கலாம்.

ஆனலும், யப்பானிலிருந்து இங்கு வரவிருக்கும் புடைவைகள் யுத்த காலத்திற்கு மூந்தி அந்நாட்டிருந்து இங்கு வந்து இறக்குமதியாகிவிலைப்பட்ட பல வகை நிறங் கொண்ட சேலைகளென்று எண்ணிக் கொள்ளவொண்ணது; அப்படியான துணிகள் தொன்மைபோல் யப்பானிலிருந்து இங்குவந்து சேருமானல் அவைகளைச் சகாய விலைக்கு வாங்கி இங்குள்ள மக்கள் அணிந்து கொள்ளுதல் முடியும். இப்பொழுது யப்பானிலிருந்து இங்கு வருமெனச் சொல்லப்படும் புடைவைகள் தைத்துடுத்தற்காகிய விலையுயர்ந்த புடைவைகளென்று சொல்லப்படுகின்றது; மேலும் தூரக்கிழக்கிலுள்ள யப்பானிலிருந்து தூரமேற்கிலுள்ள இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு அங்கே அழுத்தமும் விலையும் இடப்பட்டு மீண்டும் கிழக்கிலுள்ள இந்த இலங்கைக்கு ஏற்றுமதியாகி இங்கு வந்துசேர்ந்தபின் விற்கப்படுமானல், இத்துணிகளின் விலை எவ்வளவுக்கு ஏறுமென்பது இங்குள்ள மக்களுக்கு அனுபவத்தால் விளங்கும்

துணி மாத்திரமல்ல, யப்பானில் ஆக்கப்படும் ஏனைய பொருள் பண்டங்களும் நேரே இலங்கையிற் கொண்டுவந்து இறக்குமதி செய்து வியாபாரம் நடத்தப்படுமானல், இலங்கையில் உள்ள உடுபுடவை முதலிய மானுட வாழ்க்கைக்கு ஆவசியகம் வேண்டிய பொருள்கள் விஷயமாக, இப்பொழுது ஏற்பட்டுள்ள பஞ்சம் ஒரு அளவிற்குக் குறையுமெனக் காத்திருக்கலாகும்; இத்த விஷயமாக அமெரிக்க வியாபார நிர்வாக சபைக் காரியதரிசியாகிய மிஸ்ரர் W. A. ஹரிமன் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"இச் சமாதான காலத்திற்குரிய கைத்தொழில் விவசாயம் முதலிய முயற்சிகளைத் தொன்மைபோல் ஜெர்மனியிலும் யப்பானிலும் நாங்கள் விரைவிற் புநருத்தாரணம் செய்து வைக்கவேண்டும்; ஜெர்மனியிலே அப்படிச் செய்வதனல் ஐரோப்பாக்கண்டம் முழுவதும் வியாபாரத்திலும் பொருளாதாரத்திலும் நன்மையடையும்; அப்படியே யப்பான் முயற்சிகளைத் தொன்மைபோல் ஆக்கினற் கீழ்நாடுகளில் வியாபாரமும் பொருளாதாரமும் விருத்தியாகும்".

குறித்த அமெரிக்க காரியதரிசி கூறுவது அத்தனையும் நிசமாகும்; இதனைவிட்டு இலங்கையிலே எங்கள் அதிகாரிகள் பருத்தி செய்கைபண்ணிப் பஞ்சை விளைவித்து [illegible] புடைவையாக்கி [illegible] முயற்சிகளைச் செய்வரெனக் காத்திருத்தல் வீணாகும். பருத்தி புடைவையாகக் காய்க்குமெனின் ஒருபோது எங்கள் அதிகாரிகள் அதற்கு முயற்சி செய்வர்போலாகும்.

# குறிப்புக்கள்

### இதுதான் இலவசக் கல்வியா?

ஊர்காவற்றுறை கிழக்கில் உள்ள கத்தோலிக்கப் பாடசாலையாசிரியர்சள் செய்தார்கள் எனச் சொல்லப்படும் ஓர் அடாத கருமத்தைப்பற்றி ஓர் அபிமானி சென்ற 20-5-47 இல் வெளிவந்த இப்பத்திரிகையில் ஓர் கடிதம் எழுதியுள்ளார். குறித்த பாடசாலைக் கட்டடத்தின் பொருட்டு, அங்கே படிக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஓர் தொகைப்பணம் அல்லதுஒரு 'பாக்கற்' சீமந்து கொண்டுவர வேண்டுமென ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கட்டளை விதித்திருக்கின்றனராம். நிருபர் கூறியன அனைத்தும் உண்மையேயானல் இதனைப்போலக் கேவலமான செயல் பிறிதொன்றில்லையென்றே கூறுவோம். இலவசக் கல்விமுறையை அடியோடு நாசமாக்கச் சிலர் செய்யும் சூழ்ச்சியே இது. வித்தியாதிகாரிகள் இவ் விஷயத்தை விசாரணை புரிந்து, உண்மையெனக்கண்டால் இப்படியான கிருத்திரமங்கள் இனியும் நடவாதபடி, இதிற் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தக்க தண்டனை அளிப்பார்களென்று காத்திருக்கிறேம். இலவசக்கல்வியென்ற போர்வையுடன் ஏழைமக்களைச் சுரண்டிக் கிருத்திரமம் புரியும் பாடசாலை அதிகாரிகளின் தான்தோன்றித் தர்பாரை அடக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

*
* *

### மிலேச்சத்தனம்

சென்றவாரம் கொழும்பில் பகிரங்கமான ஓர் வீதியில் பட்டப்பகலிலே, கேவலம அநாதையான ஓர் கன்னிகையைக் கயவர் சிலர் பலவந்தப்படுத்தி அவளின் மானத்தைப் பங்கப்படுத்த முனைந்தனர் என்றும், இந்தக் "காட்சியை" 15க்கு மேற்பட்ட சனங்கள் பார்த்துக் "களித்தனர்" என்றும், ஒரு மோட்டார் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த பொலிஸ் சார்ஜன்ற் ஒருவர், பஸ்ஸை நிறுத்தி, அப்பெண்ணை மீட்டாரென்றும், ஓர் செய்தி கூறுகிறது. இலங்கை எவ்வளவு தூரத்துக்கு "நாகரீக"த்தின் சிகரத்தை யடைந்து வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும். கேவலம் மிருகஜாதிகள்தானும், தம் இனத்தவர்க்கு ஆபத்து ஏற்பட்ட காலத்தில் பாதுகாப்புக்கு ஓடிவரும்: மிருகங்களின் இனப்பாதுகாப்புக் குணந்தானும் ஆறறிவு படைத்த மனிதர்களிடம் இல்லா திருந்தமை வெறுப்புத்குரியதன்றி வேறென்ன? ஏறகெனவே இந்த இலங்கை குற்றத்தின் சிகரத்தை யடைந்துவிட்டது. காரணம் இங்குள்ள மக்கள் தம் பிரஜாவுரிமைகளையும கடமைகளையும் உணராது மிலேச்சத்தனமான கருமங்களில் ஈடுபட்டதேயென்க. நாம் மேலேகாட்டிய அக்கிரமத்துக்கு, குறித்த காடையரே பொறுப்பாளிகள் என்றாலும், இந்த அருவருப்பான சம்பவத்தைப் பார்த்து மகிழ்ந்த அவ்வளவு பேரும் குற்றத்துக்கு உடந்தையாக விருந்தனர் என்றே மதிக்கவேண்டும். இந்த "நாகரிகம்" ஒழியவேண்டும். மக்கள் மனப்பான்மை மாறவேண்டும். எங்கள் உரிமைகளையும் கடமைகளையும் நாங்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும். காடையர் அக்கிரமமும், சண்டியர் கும்மாளமும் ஒழியும்வரை, இந் நாட்டுக்குச் சுதந்திரம் எதற்கு?

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—16)

### "நிலையிற் பிரியேல்"

பரிமளம் சகவாசத்திஞற் சில நவநாகரீகங்களைக் கைக்கொண்டாளெனினும் சமய விஷயத்தில் மாத்திரம் பிடிவாதமாக நின்றாள். அவள் ஆங்கில எட்டாம்வகுப்பிற் சித்தியடைந்தவுடன், அவளை ஒரு ஆங்கில உபாத்தியாயினியாகத் தங்கள் வித்தியாசாலையில் நியமிக்கலாமெனவும், அப்படியிருந்து படிப்பித்துக்கொண்டு மேல் வகுப்பிற்காகிய கல்வியைப் பயில்வதற்குத் தாங்கள் உதவிசெய்ய முடியுமெனவும், அங்ஙனஞ் செய்யும் பட்சத்தில் அவள் சைவத்தை விடுத்துக் கிறீஸ்துவமார்க்கத்தை அநுசரிக்க வேண்டுமெனவும் அவ்வித்தியாசாலையின் அதிகாரிகள் சொன்னர்கள்; பரிமளம் அவர்கள் கேள்விகளுள் முந்திய இரண்டிற்கும் தான் சம்மதிக்க முடியுமென்றும் மூன்றுவதாகிய சமயம் மாறுதல் விஷயத்திலே தன் பெற்றாரின் சம்மதத்தைக் கேட்கவேண்டுமென்றும் பதில் சொன்னள். அதனற் பாடசாலையதிகாரிகள் ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகல் பரிமளத்தை அவள் வீட்டிற்குப் போய் அந்த விஷயத்தைப் பெற்றாரிடஞ் சொல்லி அவர்கள் சம்மதத்தையும் பெற்று வரும்படி தெரிவிக்க, பரிமளம் அப்படியே அன்று தங்கள் வீட்டிற்கு மீண்டுவந்தாள். அவள் வரவைக்கண்டு தாயுந் தந்தையும மகிழ்ச்சி யடைந்தனர்; மகளுடைய கல்வி விருத்தியைப்பற்றியும உணவு விஷயத்தைப்பற்றியும் உசாவினர்கள்; அந்த நேரத்தில் வித்தியாசாலை யதிகாரிகள் தன்னை அன்று அங்கு அனுப்பியதற்கான எதுக்களையெல்லாம் எடுத்துச் சொன்னள்; கேட்ட தாயாகிய வேதநாயகி "அதனலென்ன, எதற்கும் மனந்தானே காரணம், படிப்பிலே தேறுவதற்காக அவர்களுக்குப் புறத்தே அவர்களுடையசமயத்தைக் கைக்கொண்டு நடப்பதுபோற் காட்டிக்கொண்டு, அகத்திலே சைவசமயப்படி நடந்தாலென்ன" என்றாள்; மனைவி அப்படிச் சொல்லக் கேட்ட வேலாயுதன் "போ, போ, பைத்தியகாரி, வீண் வார்த்தை பேசாதே, அகத்தொன்று புறத்தொன்றாக நடக்கும்படியா பிள்ளைக்குப் புத்திசொல்லுகிறாய்'ஒன்றிற் சொந்தச் சமயமென் றிருக்க வேண்டும், இல்லையேல் அந்தச்சமயமென்று நடக்கவேண்டும்; இரண்டிலொன்றுமின்றி இரண்டகத்தோடு நடக்கத்தலைப்பட்டால் பின் வாழ்க்கை முழுவதிலும் எல்லாவிஷயத்திலும் இரண்டகமாகத்தான் நடக்கவேண்டிநேரும்; எங்கள் மார்க்கத்தில் என்ன பிழை கண்டாய்; அந்நிய மார்க்கத்திலே என்ன உண்மை கண்டாய்: வயிற்றுப்பிழைப்புக்காக மார்க்கத்தைக் கைவிடமுடியுமா? "நிலையிற் பிரியேல்" என்று ஔவையார் சொன்னது சும்மாவா?" என்று மனைவியைக் கடிந்துவிட்டு வேலாயுதன் தங்கள் மகளைப்பார்த்து "மகளே, "நீ; அங்கே படித்த படிப்புப் போதும்; இன்னுஞ் சிலகாலம் நீ அங்கிருந்து படித்தால், வேட்டுவனெடுத்த மென்புழுப்போல" அவர்கள் உன்னைத் தங்கள் வசமாக்கிவிடுவர்: ஆனதால், அவர்களுடைய பள்ளிக்கூடத்தைமெல்லவிட்டுவீட்டிலேவந்திருப்பதுதான்செய்யத்தக்கது"என்று கடுகடுத்துச் சொன்னன்; "அப்பா, உங்கள் சொற்படி நடப்பதுதான் என் கடமை; அல்லாமலும் வேற்றுமதத்திற்புக எனக்கும் விருப்பமில்லை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# லண்டனில் மவுன்ற்பேற்றன்

## இந்திய சுதந்திரம் எப்படியாகும்?

### லண்டனில் நடப்பது

மவுன்ற்பேற்றன் பிரபு லண்டனுக்குச் சென்று அங்கு பிரிட்டிஷ் மந்திரசபையினருடன் தினந்தோறும் இந்தியா விஷயமாகச் சம்பாஷணைகள் நிகழ்த்தி வருகிறார். இந்தச் சம்பாஷணைகளைப்பற்றிப் பலவிதமான தகவல்கள் எட்டுகின்றன. பிரிட்டிஷ் மந்திரிகள், கடைசி முறையாக இந்தியத் தலைவர்களை இங்கிலாந்துக்கு அழைத்து, அங்கே அவர்களுக்கிடையே சமரசம் உண்டாக்க முயற்சிப்பர் என்றும், அப்படியும் முடியாவிட்டால், பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்று இரண்டாக இந்தியாவைப் பிரித்துவிடுவர் என்றும் அப்படிப் பிரிக்கப்படும் பாகிஸ்தானத்தில் கிழக்குப் பாஞ்சாலமும், மேற்குவங்காளமும் சேர்க்கப்படமாட்டாவென்றும் அஸாம் மாகாணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஸில்ஹெற்பகுதி பாகிஸ்தானுடன் இணைக்கப்படுமென்றும் ஓர் சாரார் கூறுகின்றனர். இந்தியத் தலைவர்களை இங்கிலாந்துக்கழைப்பதால் இனி எவ்விதபயனும் கிடைக்கமாட்டாதெனப் பிரிட்டிஷ் மந்திரிகளிற் பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள் என்றும் அவர்களை அழைக்காமலேயே ஓர் திட்டத்தை உருவாக்கி அத்திட்டத்தை அமுல் நடத்த மவுன்ற்பேற்றன் பிரபுவுக்கு அதிகாரம் அளித்து அவரை இந்தியாவுக்கு அனுப்புவர் என்றும் இன்னோர் சாரார் கூறுகின்றனர். இன்று பிரிட்டிஷ் மந்திரசபையின் கூட்டம் ஒன்று நிகழும். அதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடைசித் திட்டத்தைப் பிரதமர் அட்லி சமர்ப்பிப்பார். மந்திரசபை அங்கீகரித்தபின், மவுன்ற்பேற்றன் இந்தியாவுக்கு மீண்டு முன்னேற்பாட்டின்படி ஜூன்மாதம் 2-ம் திகதி தலைவர்கள் மகாநாட்டைக் கூட்டிக் கடைசித் திட்டத்தை விளக்குவர்.

### அடுத்து நடப்பது

கடைசித் திட்டத்தை ஜின்னா விரும்பலாம், விரும்பாமல் விடலாம்; ஆனால் அதனைக் காங்கிரசும், முஸ்லிம் லீக்கும், சீக்கியரும் ஏற்கவேண்டிய நிலைமை ஏற்படும். அதன்பின், இப்போதுள்ள இடைக்கால அரசாங்கம் பூரணபொறுப்பாட்சியுடைய மந்திரசபைபோல அமைக்கப்படும். பாகிஸ்தான் பிரதேசங்களையும், ஹிந்துஸ்தான் பிரதேசங்களையும் நிர்மாணிக்கும் இரண்டு சபைகள் நியமிக்கப்படும். ஆனால் இப்போதுள்ள இந்திய ராணுவத்தை எப்படிப் பிரிப்பது என்பது ஓர் சிக்கலான பிரச்சினையாக வரும். ஆனால், அதுவும் எப்படியோ ஓர்விதமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று பிரிட்டிஷார் கருதுகின்றனர்.

### நூனின் ஓலம்

பாஞ்சாலத்து முஸ்லிம் லீக்கர் தலைவர்களில் ஒருவராய பிரோஸகான் நூன், லீக் மந்திரசபை யமைக்கப்படும் என்று கனவுகண்டவர், இன்று பாஞ்சாலத்தில் ஹிந்து முஸலீம் ஒற்றுமை கருதி ஓலம் போடுகிறார். பாஞ்சாலத்திலும், இந்தியாவிலும் வகுப்புக் கலகங்கள் மலிந்தமைக்குக் காரணர் மூன்றும் பேர்வழியாகிய பிரிட்டிஷார்தான் என்றும், அவர்கள் போனவுடன் இந்தியமக்கள் அனைவரும் ஒற்றுமைப்படுவர் என்றும் புதிய ஞானம் பேசுகிறார். "பிரிட்டிஷார் எங்களை இதுவரை ஏமாற்றி வந்திருக்கிறார்கள். இதனை நாம் அறியாது சண்டைபோட்டுவந்திருக்கிறோம். இனியாவது நாம் ஒற்றுமை கொண்டு கருமம் ஆற்றுவோம்' என்று அவர் ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார்.

### கலக நிலைமை

இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன் இங்கிலாந்துக்குப் பிரயாணமான நாள்தொடக்கம் பாஞ்சாலத்தில் கலகம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. கல்கத்தாவிலும் சில நாள் ஓய்ந்திருந்த வகுப்புக் கலகம் தலைதூக்கிவிட்டது. கல்கத்தாவிற் சில இடங்களில் ஊரடங்குச சட்டம் அநுட்டானத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வங்கப் பிரதமர் ஷுஹ்ராவர்த்தியை

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரராக வாழவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்த வேண்டுகோள்கள் எவ்வித பயனையும் இதுவரை கொடுக்கவில்லை. நிற்க, வங்கப்பிரதமரை ஜின்னா சாய்பு கைவிட்டுவிட்டார். ஷுஹ்ராவர்த்தி வங்காளத்தைத் தனிராஜ்யமாக்கச் செய்த முயற்சிகளை ஜின்னா நிராகரித்துவிட்டார். வங்கம் பிரிக்கப்படக்கூடாது. அப்படியே முழுவதும் பாகிஸ்தான் ராச்சியத்திற் சேரவேண்டும் என்று ஜின்னா கண்டிப்பாக ஷுஹ்ராவர்த்திக்குக்கூறிவிட்டாராம்.

### சரத் சந்திரபோஸ் முயற்சி

பாகிஸ்தான் ஹிந்துஸ்தான் என இந்தியா பிரிக்கப்படுவதையும், வங்கம் பாஞ்சாலம் என்னும் இரு மாகாணங்களைப் பிரிவினை செய்வதையும் ஸ்ரீஜுத் சரத் சந்திரபோஸ் எதிர்த்து, தாம் ஓர் திட்டம் வகுத்து வருகிறார். இந்தியாவில் உள்ள ஒவ்வோர் மாகாணமும் ருஷியாவில் உள்ளதுபோலச் சமதர்மக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட குடியரசாக வேண்டும். இந்தக் குடியரசுகள், பின்னர் விரும்பினால் ஓர் சமஷ்டியிற் சேரலாம், ஆனால் எந்தக் குடியரசையாவது பலவந்தப்படுத்திச்சமஷ்டியிற்சேர்க்கக்கூடாது, இதுதான் சரத் சந்திரபோஸின் திட்டம். இந்தத்திட்டத்தை வங்கப்பிரதமர் ஷுஹ்ராவர்த்தி முதலாம் லீக் பிரமுகர்களும் சில காங்கிரஸ்வாதிகளும் ஆதரிக்கிறார்களாம். எது எப்படியிருந்தபோதிலும், வங்காளம் பிரிக்கப்படாமல் இருக்கமுடியாது, இதுவரை முஸல்மான்கள் செய்த அக்கிரமம் போதும். மேற்குவங்காளத்தைப் பிரித்து ஹிந்துக்களிடம் கட்டாயம் ஒப்படைக்க வேண்டும் என்று பல காங்கிரஸவாதிகள் கூறுகிறார்கள்.

# நாடும் மதமும்!

## அஸப் அலி விளக்கம்

ஐக்கியநாடுகள் சங்கக் கூட்டத்துக்கு இந்தியாவின் ஏகபிரதிநிதியாகச் சென்றுள்ள ஜனாப் ஆஸப்அலி தமதுநாவன்மையாலும் வாதத் திறமையாலும் அயல்நாட்டினரையெல்லாம் பிரமிக்கவைத்துவிட்டார். ஐக்கியநாடுகள்சங்கப் பொதுச்சபையின் முன்பாக அபிப்பிராயங் கூறுமாறு பாலஸ்தீன யூதர் ஸ்தாபனப் பிரதிநிதிகளை அழைக்கவேண்டுமென்ற விஷயத்தைப் பொதுசபை நிகழ்ச்சிக் குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று போலந்துப் பிரதிநிதி கொண்டுவந்த பிரேரணை குறித்துத் தமது கருத்தைத் தெரிவிக்கையில், 'நாடும்-மதமும்' என்ற பிரச்சினையைப் பல நாட்டாரும் பயன் பெறக் கூடிய வகையில் அழகாக எடுத்து ஆஸப்அலி விளக்கியுள்ளார்.

"மதமே ஒரு மக்கள் தொகுதியை ஒரு நாடாக. அதாவது 'நேஷன் ஆக, ஆக்கிவிடக்கூடும் என்பது என்னால் புரிந்து கொள்ள முடியாத விஷயமாயிருக்கிறது. நாடு அல்லது நாட்டார் என்பதை ஆராயப் புகுந்தால், ஒவ்வொரு நாட்டிலும் பற்பல மதத்தினரும் பற்பல இனத்தினரும் சேர்ந்து கிடப்பதை நாம் அறிகிறோம். உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனை இனத்தவர், எத்தனை மதத்தினர் அங்கேசென்று குடியேறி இப்போது அமெரிக்கர்களாய் விட்டனர்? பிரிட்டனிலும் இப்படித்தானே? பிக்ட் இனத்தார், ஸ்காட்லாந்தியர், நார்வேக்காரர், ஜெர்மானியர், பிரெஞ்சுக்காரர்-இன்னும் எத்தனை எத்தனை இனங்களோ எல்லாம் சேர்ந்துதானே பிரமாத சக்தி வாய்ந்த ஒரு நாடாக விளங்குகின்றனர், சிறிது காலத்துக்குமுன் இந்த ஸகாட்லாந்தியரும், வெல்ஷ் மக்களும் ஐரிஷ் மக்களும், ஆங்கிலேயரும் [illegible] பிடித்[illegible] தானே? இன்று நிலைமையில் எவ்வளவு மாறுதல்? எவ்வளவு சௌஜன்யமாக உலகச் சபைகளில் எவ்வளவு செல்வாக்குடன் விளங்குகின்றனர்.

"ஆகவே, நாடு என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்வது அவசியம். அது இனம என்பதற்கு நேர்ப்பதமல்ல. கேவலம் ஒரு அரசியல்கட்சி என்பதும் ஆகாது. பொதுவான அக்கறைகள்கொண்ட ஒரு சமுதாயத் தொகுப்பே நாடு. அத்தப் பொதுவிஷயங்களில் பொருளாதாரம் முதற்கொண்டு கலாசாரம் வரையுள்ள எல்லாத் துறைகளுமே அடங்கிவிடும்.

"இதுதான் உண்மை என்பதை நாம் உணர்ந்துகொண்டால், யூதர் பிரச்னையையோ வேறு இனப்பிரச்னையையோபற்றி விவாதிக்கையில், உலகில் ஒருகுறிப்பிட்ட பிரதேசத்தில் பல்வேறு மதங்களையும், பல்வேறு இனங்களையும் சார்ந்த மக்கள் ஒன்றாக ஒருமித்து ஒரே நாட்டாராக வாழ இயலும் என்பதை மறக்காமல்தான் அதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

"பாலஸ்தீனத்தின் நிலைமை என்ன? அங்கே கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்; முஸ்லிம்களிருக்கிறார்கள்; யூதர்களிருக்கிறார்கள்; இன்னும் பலரும் இருக்கலாம் நாஸ்திகர்களும் சிலர் கண்டிப்பாய் இருப்பார்கள்; அரசியல் கொள்கைக்காரர்களும் இருப்பார்கள். ஆனால் அவர்களனைவரும் ஒரே மக்கட்கூட்டமாய் வாழ்ந்து வருகிறார்கள்."

### இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஸ்தானிகா

பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவில் அகன்றபின், இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூதுவராக இப்போது இந்தியா மந்திரியாகவுள்ள லிஸ்ரோவல் பிரபு நியமிக்கப்படலாமென்று 'றெயினோல்ட்ஸ் [illegible]' பத்திரிகை கூறுகிறது.

# திரு ஐயாறு

தஞ்சாவூரை அடுத்து ஏழுமைல் தூரத்தில் திருவாதியென்று வழங்கும் திருஐயாறு மிக அழகிய சிவஸ்தலங்களில் ஒன்று. காவிரிக் கரையில் உள்ளது. தஞ்சையிலிருந்து ஐந்து நதிகளைக் கடந்து ஐயாற்றுக்குச் செல்லவேண்டும். அதனால் ஐயாறு என்ற பெயர் ஏற்பட்டது அப்பர் சுவாமிகளுக்குக் கைலாயம் காட்டிய அற்புத ஸ்தலம் இது. திருஐயாற்றைச் சுற்றி ஏழு முக்கிய ஸ்தலங்கள் இருக்கின்றன. சப்த ஸ்தானத் திருவிழா என்பது மிகவிசேஷமானது. அப்பொழுது ஏழு ஊர்ச் சுவாமிகளும் திரு ஐயாற்றுக்கு வரும்.

### தேவாரம்

'புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறி மயங்கி,
அறிவழிந்திட் டைமேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்
றருள் செய்வான் அமரும் கோயில்,
வலம் வந்த மடவார்கள் நடமாட முழ வதிர
மழையென் றஞ்சி
சில மந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திரு ஐயாறே"

—லோகோபகாரி

# கெட்டிக்காரன் புழுகு...!

## கொத்தலாவல கூறிய வீரம்!

ஐக்கியதேசியக்கட்சிப் பிரசாரகர்த்தாவான மிஸ்ரர் ஜே எல். கொத்தலாவல, சென்ற மார்ச்மாதம் குருநாகலையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில், யுத்தகாலத்தில் இலங்கை மந்திரிமார் வீரத்துடன் ஆற்றிய சேவையைப் பாராட்டித் தம்பட்டம் அடித்தார். 1942 ம் ஆண்டிலே ஜப்பானியர் இலங்கையின் வாசலுக்கு வந்துவிட்டனர். அந்த நேரத்தில் பிரிட்டிஷ் அதிகாரிகள் செய்வதின்னவென்றறியாது விழித்தனர். அந்தநேரத்தில் இலங்கையின் பிரதம சேனாதிபதியாகவிருந்த சேர் ஜியோபிரே லெயிற்றன் மந்திரிமாரை ராணிமாளிகைக்கு அழைத்தார். 'நிலைமை மோசமாகிவிட்டது, ஆனபடியால் மந்திரிகளாகிய நீங்களும் ஐரோப்பியரும் இலங்கையை விட்டு வேற்றிடம் போங்கள்' என்று அவர் மந்திரிமார்க்குக் கூறினர். மந்திரிகளாகிய நாங்கள் அஞ்சவில்லை, எங்களுக்கு மாத்திரம் சுயராச்சியம் தருவதாக நீங்கள் வாக்குப்பண்ணினால், நாங்கள் இங்கே யிருந்துகொண்டே ஜப்பானியரின் ஆக்கிரமிப்பைத் தடுப்போம் என்று மந்திரிகள் லெயிற்றன் சேனாதிபதிக்குக் கூறினர் என்றெல்லாம் மிஸ்ரர் கொத்தலாவலை குருநாகலைக் கூட்டத்தில் அளந்து கொட்டினார்.

கொழும்பில் பிரசுரமாகும் "ஸேர்ச் லையிற்" என்னும் வாரப்பத்திரிகையின் ஆசிரியரான மிஸ்ரர் கோமெஸ் என்பவர், இவ்விஷயத்தை இப்போது இங்கிலாந்தில், போட்ஸ்மவுத் கடற்படைத்தள அதிகாரியாக விருக்கும் சேர்ஜியோ பிரே லெயிற்றனுக்கு அறிவித்து மிஸ்ரர் கொத்தலாவலை கூறியது மெய்தானா என்று கேட்டார்.

சேர் ஜியோப்பிரே லெயிற்றன், மிஸ்ரர் கோமெஸின் கடிதத்துக்குஇப்போது ஓர் பதில் அனுப்பியிருக்கிறார். அது வருமாறு:

கடற்படைத்தளம்
போட்ஸ்மத்: 27 மார்ச், 1947.

அன்புமிக்க கோமெஸ் அவர்களுக்கு,

உம்முடைய 12-3-47க்கடிதம் கிடைத்தது...நீர் கூறிய வசனங்கள் மிஸ்ரர் கொத்தலாவலையினால் கூறப்பட்டனவாயின், அவை உண்மையல்ல வென்பதை நான் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கிறேன்...இவ்விஷயத்தில் நான் ஓர் வாதத்தைக் கிளப்ப விரும்பவில்லை. எனவே அதனைப்பற்றி நான் இனி அதிகம் எழுதவில்லை. ஆனால் மிஸரர் கொத்தலாவலை கூறியபடி ஒரு விஷயமும் நடக்கவில்லை.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
ஜீ. லெயிற்றன்,
கடற்படையதிபதி.

### கத்திக்குத்துக்குமரணதண்டனை

இலங்கையிற் கத்திக் குத்துச் சம்பவங்கள் வரவர அதிகரிக்கின்றன. கோபம் வந்தவுடன் கத்திக்குத்து! உலகில் உள்ள சகல நாடுகளிலும் இலங்கையில்தான் குற்றங்கள் அதிகமாக உண்டு என்பது பகிரங்கமான ஓர் இரகசியம். ஓர் காடையன் கத்தியாற் குற்றுகிறான். பொலிசார் அவனை அகப்படுத்துகிறார்கள். வியாச்சியம் நடக்கிறது குற்றவாளியெனக் கண்டால் 3 மாதமோ, 6 மாதமோ, சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த முறையினால் குற்றங்கள் குறைகின்றனவா?

இந்தியாவின் மத்திய மாகாணத்தில் காங்கிரஸ் அரசாங்கம் கத்திக் குத்துக் குற்றங்களுக்கும் மரணதண்டனை, தீவாந்தரதண்டனை விதிக்கத் தீர்மானித்து, அதகற்ற சட்டமொன்றை இயற்றப் போகிறது. இச்சட்டம் மாகாணம் முழுவதிலும் உடன் அமுல் நடத்தப்படமாட்டாது. கத்திக் குத்தும் காடைத்தனமும் எங்கு அதிகமாக உண்டோ, அங்குதான் அது அநுட்டானத்துக்குக் கொண்டுவரப்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. என். நடராஜா

## இலங்கை மக்களின் அநுதாபம்

திரு என். நடராஜா (கே. வி) அவர்களின் அகால மரணத்திற்கு அநுதாபம் தெரிவிப்பதற்காக ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நீதியரசர் நாகலிங்கம் அவர்களின் தலைமையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஓர் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான சனங்கள் கூட்டத்துக்கு வந்திருந்தனர். கூட்டம் நடக்கும்போது பலர் கண்ணீர்வடித்தனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

ஸேர். வி வி. ராமன், திருப்புகழ் மணி, டி. எஸ். செனநாயக்கா, திரு. வி. டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா நீதியரசர் கெனமன், போன்ற அநேகரிடமிருந்து வந்த அநுதாபச் செய்திகள் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன.

நீதியரசர் நாகலிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

“திரு. நடராஜா ஓர் உத்தமமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார். தன்னுடைய விடாமுயற்சியாலும் சளையாத உழைப்பினாலும் பெரிய பதவிக்கு உயர்ந்தார். எல்லா மதத்தினரும் போற்றும்படி வாழ்ந்தார். எப்பொழுதும் நன்மையே செய்தார். அவருடைய பிரிவினால் இலங்கையில் ஓர் மிகப் பெரிய உத்தமனை இழந்தோம்.”

பின்னர் டக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் பேசும்போது கூறியதாவது:

“சர்வகலாசாலையின் வளர்ச்சிக்குப் பெரிய மனிதர்களின் உதவிவேண்டும். அப்படிப்பட்ட பெரியமனிதர்களில் திரு. நடராசாவும் ஒருவர். அவர் எந்தச்சமயமும், என்ன வேலைக்கும் எங்களுடன் சந்தோஷமாக ஒத்துழைத்து வந்தார். அந்நிய தேசத்திலிருந்து இத்தீவுக்கு ஒருவர் வந்தால் அவர்களுடன்பேசி இத்தேசத்துப் பழக்க வழக்கங்களை அவர்களுக்கு எடுத்துரைப்பவர்கள் மிகவும் குறைவு. நான் ஆறு வருஷத்திற்கு முன் இங்கு வந்தபோது திரு. நடராஜா எனக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறினார். அவருடைய பிரிவு இலங்கைக்கு ஓர் பெரிய குறையாகும்.’

திரு. குரூஸெற் தம்பையா, டாக்டர் வ. கந்தையா, டக்டர் ராஜபக்ஸ ஏ. எம். கே. குமாரசுவாமி முதலியோர் திரு. நடராஜாவின் வாழ்க்கை வரலாற்றையும், வாழ்க்கையின்பிற்பகுதியில் ராமகிருஷ்ண மிஷன், விவேகானந்தசபை முதலிய மதஸ்தாபனங்களின் மூலமாக பெரியதொண்டாற்றியதைப்பற்றியும் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் இளமையில் தன் தாய் தந்தையரை வழிபட்டு வந்த மாதிரியையும், கலாசாலையில் காட்டிய அபாரதிறமையையும் புகழ்ந்து பேசினார்கள்.

திரு. நடராஜாவின் மரணத்திற்கு மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவிக்கும் முறையாக சபையோர் அனைவரும் எழுந்துநின்று இரண்டு நிமிடம் மௌனமாக மரியாதை செலுத்தினர்.

# 1600 கோடி டாலர்

## அமெரிக்காவின் உதவி

கிரீஸ், துருக்கி என்னும் இரு நாடுகளிலும், ருஷியாவின் செல்வாக்குப் பரவாம லிருப்பதை அந்தரங்க நோக்கமாகக்கொண்டு, அமெரிக்கா அந்த நாடுகளுக்கு 40 கோடி டாலர் கடன் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது. இவ்வளவுடன் அமெரிக்கா திருப்திப்படவில்லை.

ஐரோப்பாவில் இன்னும் பல நாடுகள் தரித்திரத்திற் கிடக்கின்றன. இதன் பயனாக அவை ருஷியாவின் சமதர்மக் கொள்கைகளில் ஈடுபட்டு சோவியத் செல்வாக்கிற்குள் வந்துவிடும் என்றும், அந்த “ஆபத்திலிருந்தும்” அவற்றை நீக்க வேண்டுமானால். அந்த நாடுகளுக்கும் பணஉதவி புரியவேண்டுமென்றும் அமெரிக்கா யோசிக்கிறது; அப்படிப் பண உதவி செய்வதானால், அடுத்த 3 ஆண்டுகளில் அமெரிக்கா 700 கோடி டாலர் அவற்றுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்த ஆண்டிலும் அடுத்த மூன்று ஆண்டுகளிலும் அமெரிக்கா உலகெங்கும் 16000 கோடி டாலர் பணத்தை பொருள்களாகவும், ரொக்கமாகவும் உலக நாடுகளுக்குக் கொடுக்க நிச்சயித்திருக்கிறது. இதற்குப் பதிலாக 800 கோடி டாலர் பெறுமதியான பொருள்களை உலக நாடுகளிலிருந்து அது இறக்குமதியாக்கும்.

# நீர்கொழும்பில் தமிழர்

## பெரும் பான்மையினர் அவர்களே

நீர்கொழும்பு நகரசங்கக் கூட்ட நடவடிக்கைகள் இனிச் சிங்களத்திலேயே இருக்கவேண்டும் ஆனால் யாரும் அங்கத்தவர்கள் விரும்பினால் தமிழில் அல்லது ஆங்கிலத்திற் பேசலாம் என்று சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த மேற்படி சங்கக் கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தை எதிர்த்து பேதுரு பீரிஸ் என்பவர் தமிழிற் பேசினார். நீர்கொழும்பு நகரத்தில் வதியும் 35,000 மக்களில், 2,0000 மக்கள் தமிழைப் பேசுவதால், சிங்களத்தை உத்தியோகபாஷையாக வைத்தல் முறையல்ல என்று அவர் கூறினார்.

விவாதத்தின் பின்னர், தீர்மானத்துக்குச் சாதகமாக 5 பேரும், பாதகமாக 5 பேரும் வாக்களித்தனர். தலைவராக விருந்த மிஸ்ரர் வி. எம். பர்ணாந்து என்பவர் தமக்குரிய விசேஷ சம்மத உரித்தைத் தீர்மானத்துக்குச் சாதகமாகக் கொடுத்தமையால் அது நிறைவேறியது

நீர்கொழும்புப் பகுதியில் உள்ளவர்களிற் பலர் சிங்களப் பெயர்களைக் கொண்டிருந்தபோதிலும், அவர்களுடைய தாய்ப்பாஷை தமிழ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம்

17-5-47 சனிக்கிழமை பி. ப 6 மணியளவில் நாவலப்பிட்டி இந்துவாலிபர்சங்க ஆதரவின்கீழ் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் மேற்படி விழா கொண்டாடப்பட்டது. பிரம்மஸ்ரீ S K. சர்மா அவர்கள் சுத்தானந்த பாரதியாரைப் பற்றிய வாழ்த்துப்பாக்கள் கீர்த்தனைகள் பாடினார்கள். பின்னர் ரிஷிகேசம் சிவானந்த சரஸ்வதியவர்களுடைய வாழ்த்துரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வாசிக்கப்பட்டன. அதன்பின்னர் திரு. மு கணபதிப் பிள்ளையவர்கள் “சுவாமி சுத்தானந்தர்” என்பதுபற்றி ஓர் இனிய சொற்பொழிவு ஆற்றினார்கள். திரு வ கார்த்திகேசு அவர்கள் குறிப்புரை கூறினார்கள். காரியதரிசியால் நன்றியுரை கூறப்பெற்று பூஜை பிரசாதம் வழங்கல் என்பவற்றோடு விழா இனிதே நிறைவேறிற்று. —சடித

# செய்தித் திரட்டு

இலங்கையில் ஏறக்குறைய 50,000 பேர் காசரோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

* *

இந்தவாரம் முடிவதற்கிடையில் பர்மாவிலிருந்து 2 கப்பல் அரிசி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* *

அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு வேண்டிய பெட்ரோலை சேமித்து வைத்திருக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரி மிஸ்ரர் பண்டார நாயக்கா உத்தரவு பிறப்பித்திருக்கிறார். பாராளுமன்றத்து அபேட்சகர்களாக வருவோர்க்கு உதவப்படுதற்காகப் பல பெற்றோல் கூப்பன்கள் அச்சிடப்படுகின்றனவாம்.

* *

பலஸ்தீனத்தில் யூதர் அட்டூழியத்தைத் தடுப்பதற்காக, இந்த வருஷத்தில் இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கம் 35 லட்சம் பவுண் செலவழித்திருக்கிறது.


## விளம்பரம்

மண்டைதீவு கிழக்கில், கடற்கரைக்குச் சமீபமாகவுள்ள விசாலமான கல் வீடு வளவுடன் வாடகைக்குக் கொடுக்க இருக்கிறது. தேவையானோர் எம்முடன் ஒழுங்குபண்ணிக் கொள்ளலாம்.

சி. பசுபதிச் செட்டியார்

வண்ணார்பண்ணை.

M 36 20, 23, 27, 30-5-47


# திருச்சி ரேடியோ

சனி மே 24

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எஸ் ரங்கநாயகி வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 எஸ் கங்காபாகீரதி எஸ் யமுனாபாய் பாட்டு 8-30 சித்ரகானம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குரல்வகை 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் கங்காபாகீரதி பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 டி பி எஸ் செல்வரத்தினம் பிள்ளை பாட்டு 5-40 அருட்பா திருவந்தாதி விளக்கம் 5 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி பி எஸ செல்வரத்தினம் பாட்டு 7-15 பாதைநெறி 7-30 தமிழில் செய்திகள் 7-45 எமனி சங்கர சாஸ்திரி வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9-45 கிளாரினெட், புல்லாங்குழல் 10 இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு மே 25

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி ராதாகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 நாகஸ்வர இசை 8.30 டி எ ஞானம்பாள் வீணை 9 முடிவு

12 கதம்பம் 12-30 தபால்மூலம் 12-40 கிழிஞ்சல் செந்தாமரை நாடகம் 12-45 டின்னர் திட்டம் 12-55 காமாஞ்சனி புதுமெட்டு 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை 5 பி ராதாகிருஷ்ணன் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 டி எ ஞானம்பாள் வீணை 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 கமலா கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 எம் எம் தண்டபாணி தேசிகர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 விதார் வயலின் 10 இசைவேளை 10-30 முடிவு

திங்கள் மே 26

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில்

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சமயபுரம் சுந்தரேசம் பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8-30 கே வி நடராசன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சிதம்பரம் ஜே வனசாக்ஷிபாட்டு 2 15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 சமயபுரம் சுந்தரேசம்பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்சிகள் 7 நாகர்கோயில் கே மகாதேவன் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7 45 பெண்களுக்கு 8 கே வி நடராசன் பாட்டு 8-30 நாகர்கோயில் கே மகாதேவன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 சித்ரகானம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9,45 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்தியம் 10 இசைவேளை 10-30 முடிவு.

செவ்வாய் மே 27

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி ஆர் ராமபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்யம் 8-30 டி வி சிவசிதம்பர ஐயர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் 1-40 டி வி சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 டி வி சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல் 2-15 கோடைக் கல்வி 2-45 முடிவு.

மாலை 5 டி ஆர் ராமநாத பாகவதர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக்கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதுரை மணி ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 மகாராஜபுரம் விச்வநாதய்யர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 10 இசைவேளை 10-30.


# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

## க. ஆறுமுகம்பிள்ளை

நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to, 1—4—48

## விற்பனவு

வடக்கன் எருதுகள் சோடி ஒன்றும் வண்டிலும் சகாயமான விலைக்குக் கீழ்க் கண்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

T சீனிவாசகம்

23. கன்னாதிட்டி ரோட்

யாழ்ப்பாணம்.

M 39 23—5—47.

## தேவை

கட்டுக்குளம் பற்று ஐக்கிய பண்டசாலை யூனியனுக்கு ஓர் மனேச்சர் தேவை. காசுப்பிணை ரூபா 1000/; சம்பளம் மாதம் ரூபா 100/- கணக்கில் அநுபவமும் தமிழ் ஆங்கிலிசில் நடைமுறை அநுபவமும இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் கீழ் கையொப்பமிடும் விலாசத்துக்கு 26-5-47 க்குமுன் அனுப்பவேண்டும்.

V. K. சுப்பிரமணியம்

யூனியன் காரியதரிசி

குச்சவெளி, திருகோணமலை. 18-5-47

M 35. 23-5-47

## விளம்பரம்

வடமாகாண டிஸ்திறிக்சைச் சேர்ந்த கிளிநொச்சிப் பகுதியிலுள்ள பாவிப்பாஞ்சான் என்னுமிடத்திலிருக்கும் ரோட்டுக்குரிய காட்டு நிலங்களையும் செடிகளையும் வெட்டித் துப்பரவுபண்ணிச் சுட்டுக்கொடுப்பதற்கு வடமாகாண ஏசண்டர் அவர்கள் 1947ம் ஆண்டு ஜூன் June) மாதம் 17ம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்குள் குறித்த விண்ணப்பப் பத்திரங்களை (ரெண்டர்களை) ஏற்றுக்கொள்வார். விண்ணப்பப் பத்திரங்கள் ஐம்பது ரூபா (ரூ. 50/-) கட்டி வடமாகாண ஏசண்டரிடம் 1947-ம் ஆண்டு ஜூன் (June) மாதம் 1ம் திகதி பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம். மறு விபரங்களையும் அறிந்துகொள்ளலாம்

G. 38 23.5.47


## சேக்கிழார் குருபூசை

நிகழும் சர்வசித்து வருஷம் வைகாசி மாதம் ௧௧ உ (25-5-47) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபை யாதரவில் சேக்கிழார் நாயனார் குருபூசை கீழ்க்காணும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

மு. ப. 10 மணிதொடக்கம் பி. ப. 2 மணிவரை நீராவியடி திலகவதியார் மடத்தில் கடவுள் ஆராதனை உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணம்—புராண படனம் மாகேசுரபூசை,

மாலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் பண்டிதர் திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் B. A. சேக்கிழார் நாயனார் என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். தமிழ் மறையும் ஓதப்பெறும்.

கௌரவ காரியதரிசி

சைவபரிபாலனசபை

20—5—47

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனதனால், அடுத்துவரும் விடுமுறை நாட் காலத்தில் நான் அப்படியே செய்துவிடுவேன்; நிற்க, 'வேட்டுவ னெடுத்த மென்புழுப்போல் என்றீர் களே: அது என்ன அப்பா? எனக்கு விளங்கவில்லை" என்று கேட்டாள் பரிமளம். "வேட்டுவனென்பதுவேட் டை வாளியென்னுஞ் செந்து, அது வேற்றுப் புழுவையெடுத்துத் தன்னி டத்திற் கொண்டுபோய் வைத்துவள ர்த்துப் பின் தன் வடிவமாக்கிவிடு மென்று நூல்களிற் சொல்லப்பட்டி ருக்கிறது; அதுபோல, அவர்கள் உன்னையுந் தம் வசமாக்கி விடுவார்க ளென்பதற்கு உதாரணமாகச்சொன் னேன்" என்று விளங்கப்படுத்தினன் வேலாயுதன்; பரிமளம் வெள்ளிக்கி ழமை இரவும், சனி ஞாயிற்றுக்கிழ மைகளிலும் வீட்டில் தங்கியிருந்து திங்கட்கிழமை அதிகாலையில், புறப் பட்டு வித்தியாசாலை போய்ச் சேர்ந் தாள்; அங்கே பாடசாலை யதிகாரி கள்கேட்டபோது, தன்பெற்ருருக்கு அக்கருமஞ் சம்மதமல்ல என்பதை யும் உள்ளபடி தெரிவித்துவிட்டாள்: அதனல் அவர்கள் அவளிடத்து வைத்த அபிமானங் குன்றப்பெற்ற னர்; அடுத்த விடுமுறை நாள் தொட ங்குதலும், பரிமளம் தனக்குரிய பொ ருள் பண்டங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வித்தியாசாலை அதிகாரிகள் ஆசிரியர்கள் சகபாடிகளாகிய எல்லா ர்க்குஞ் சொல்லி விடைபெற்றுத் தங் கள் வீட்டிற்கு வந்துசேர்ந்தாள்.

### எல்லாம் விதியென்று சொல்லிவிட்டு சும்மாவிருக்கலாமா?

பரிமளம் வீட்டிற்குவந்து சிலநாட் சும்மாவிருந்தாள்; தன் படிப்பு விரு த்திக்கு இடையூறு வந்ததேயென்ப தையிட்டுக் கவலைப்பட்டாளெனினும், மார்க்கம் மாறுவது அவளுக்குப் வெறுப்பாகவேயிருந்தது; இப்படியி ருக்க, அவள் தந்தையாகிய வேலாயு தன், அயலிலுள்ள செல்வர் வீட்டுப் பெண் பிள்ளைகள் சிலர் தங்கள் மக ளிடம் வந்து பாடங் கேட்கவும், மாசந்தோறும் வேதனங் கொடுக்க வும் ஒழுங்கு செய்தான்; இப்படிச் சில மாசங்கள் கழிந்தன: இங்ஙனம் இருக்கும்போதே, முருகேசன்விஜய ரத்தினத்திற்குப் பெண் பேசும்பொ ருட்டு வேலாயுதன் வீட்டிற்குப் போனன்: முருகேசன் வேலாயுத னுக்கு அறிமுகமானவன்; பரிமளத் தைப்பற்றியும் நன்கு அறிந்தவன்; பொதுவாக, கல்யாணத் தரகர்களா யுள்ளவர்கள் தம்மூரில்மாத்திரமல்ல, வேற்றூர்களில் வசிக்கும் பிரமசாரிக ளான வாலிபர்கள், தாரமிழந்தவர் கள், வயசு ஐம்பது அறுபது வரையி லாகியும் முந்திய தாரத்துப் பிள்ளைக ளுடையவர்களாகியும் சாகமுந்தி இன்னொரு தாரங் கொள்ளவேண்டு மென்ற பெண்ணாசைகொண்ட அமங் கலரென்னுமிவர்களைப்பற்றியும், கன் னியர்கள், அவர்களுள்ளும் ஒவ்வோர் காரணம்பற்றிக் கரையேறும லிருக் கும் மங்கையர்கள், தமக்குரிய கண வன் இறந்தபோக அவனுக்குப் பெற்ற பிள்ளைகள் மூன்று நாலு இரு ப்ப இன்னமு மொருமுறை கல்யா ணம் முடிக்கவேண்டுமென்ற ஆசை சைகொண்ட அரிவையர்கள், கொண் ட கணவனுடன் ஒற்றுமையாக வாழ மாட்டாமற் பிணக்குப்பட்டு நீதித்த லத்திற் போய் அவனுக்கு மாருக வியாச்சியந் தொடர்ந்து வழக்காடிக் கல்யாணப் பதிவையும் தவிர்ப்பித்த பின், வேறு ஒவரையும் மணந்து கொண்டு வாழவேண்டுமென்ற நோக் கங்கொண்ட வஞ்சியர்களாகிய இவர் களைப்பற்றியும் நன்கு விசாரித்து அறிந்திருப்பார்கள். இப்படிக் கலி யாணத் தரகர்கள் அறிந்திருப்பது அவர்களுடைய பிழைப்பின் நிமித்த மாகும்; முருகேசன் வேலாயுதனைக் கண்டு சுகம் விசாரித்தபின், பல விஷ யங்களை அவனேடுகலந்து பேசிவிட்டு பின் அவனைப்பார்த்து "அண்ணே, எல்லாஞ் சரி, தங்கைச்சியை நெடுக இப்படியே வைத்துக் கொண்டிருப் பது முறையோ, பல பிள்ளைகளென் ருலுங் காரியமில்லை; ஒரேயொரு மகள்; அந்த மகளுக்கு ஒரு சம்பந் தத்தைப் பேசி ஒழுங்குபண்ணிச் செய்துவைத்துச் சீர்சிறப்பை நீங்கள் பார்க்கவேண்டாமா? எல்லாம் விதி தான் என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டாற் காரியங்கைகூடுமா? விளக்குத் தகளி நிறைய எண்ணெயி ருந்தாலும், அதிலே திரியிட்டிருந்தா லும், அந்தத் தீபத்தை ஒருவர் ஏற்றி னல்தானே அண்ணே, அது சுடர்விட் டெரியும்; இது உங்களுக்குத் தெரி யாத கருமமா? நான் சொல்லவேண் டியதில்லையே..." என்று வாக்குவன் மையோடு வார்த்தையாடினன்; இப் படியாக அவன் பேசிக்கொண்டிருக் கும்போது வேலாயுதன் தன் மனைவி யைக்கூப்பிட, அவளும் அங்கேவந்து சேர்ந்தாள்; முருகேசன் பேசியவிஷ யத்தை வேலாயுதன் தன் மனைவிக் குச் சுருக்கமாகச் சொன்னன்.

### இயன்றதைத்தானே கொடுக்கமுடியும்!

வந்த மனைவியும், "அவர் சொல்லு வது நியாயந்தானே; சும்மா இருந் தால் ஏதும் ஆகுமா?" என்று கணவ னையே குறை சொன்னள்; அதனைக் கேட்ட வேலாயுதன், முருகேசனைப் பார்த்து, "தம்பி, என்னை எல்லாருங் குற்றஞ் சொல்லுகிருர்கள்; நான் செய்வதென்ன? என் பிள்ளையின் கருமத்திலே நான் பராமுகமாகவிரு க்கவில்லை; நான் நேரிற் பேசாவிட் டாலும் எனக்கு நம்பிக்கையானவர் விசுவாசமானவர் இரண்டு மூன்று பேரைக்கொண்டு கல்யாணம் பேசு வித்தேன்; அவர்கள் பெண்ணையிட் டுத் திருப்திப்படுகிருர்கள்; பெண் படி த்தவள், அழகானவள், குணமான வள் என்றெல்லாஞ் சொல்லிச் சம்ம தித்தாலும், சீதனம்போதாது என்று சம்மதிக்க மறுத்து விட்டார்கள்; நான் என்னசெய்வேன்; என்னல் என்னிடத்திலுள்ளதை,என்னலியன் றதைத்தானே கொடுக்க முடியும்; இனிமேல் உழைப்பதையும் நான் என் மகளுக்குத்தானே கொடுப் பேன்: இல்லையென்று சொல்ல எங்க ளுக்கு வேறு பிள்ளையுண்டா? அல்லா மலும் என்பிள்ளை ஏதோ தமிழும இங்கிலீசும் இயன்றவரையிற் படித் திருக்கிருள்; அற்ப கல்வியாகவிருந் தாலும், தான் கற்றதைக்கொண்டு நாலு பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல் லிக் கொடுத்துத் தன்னல் இயன்ற பாருளீட்ட இவளால் முடியும்: இதற்குமேல் இனி நான் என்னசெய் வது, எங்கே போவது, கையிலே மடியிலேபொருளிருந்தால்பெற்றபிள ளைக்குக் கொடாமல் உலோபம் பண் ணுவார் உலகத்திலுண்டா? தம்பி, முருகேசு நான் சொல்வது இவ்வள வும் நிசம்: ஏதோ, பிள்ளையின்காலைக் கையைக் கழுத்தை மறைத்து, நாங் கள் குடியிருக்கும் வீடுவளவையும் எங்களுக்குச் சீவியங் கண்டு பிள்ளை பேரில் உறுதி முடித்துக் கொடுக்க லாம். தம்பி, நீயும் இந்தப் பிள்ளைக்கு ஒரு தமயனென்று நினைத்து, எங்கே னும் ஒரு நல்ல சம்பந்தமாய்ப் பேசி ஒழுங்குசெய்து நிறைவேற்றி வைத் தால் உனக்குக் கோடி புண்ணியங் கிடைக்கும்; ஊருக்கெல்லாங் கல்யா ணம் பேசி முடித்துவைக்கும் உன க்கு என் பிள்ளை விஷயத்தில் ஒன் றைச் செய்துவைப்பது கஷ்டமல்ல தம்பி"என்று பரிவுடன் சொன்னன்: இங்ஙனமாக, பக்கலிலே நிற்குந் தூணிற் சாய்ந்தபடி இவைகளை யெல்லாங் கேட்டுக்கொண்டு நின்ற வேதநாயகி, "அப்பா, நான் பெண் ணைப் பிறந்தவள்: எந்த இடத்திலே வாய் திறந்தாலும் பொல்லாப்பென் பர்: ஆனாலும் [illegible] சொல் லுகிறேன்; [illegible] ந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள்; இந்தக்காலத்திலேயுள்ள வாலிபர்கள் பெண்ணுக்குச் சாதி மரபு சமயம் ஒழுக்கம் சீதனம் முதலிய இவைக ளைப்பற்றிக் காரியமில்லை; பெண் பேர ழகியாகவும், தமிழ் தெரியாவிட்டா லும் இங்கிலீஷ் அற்பமேனும் படித் துப் பேச எழுதப் பழகிக்கொண்டவ ளாகவும், நவநாகரிகம் படைத்தவ ளாகவும், ஆண்களோ, பெண்களோ எவரோடும் எந்தக் கூட்டத்திலும் சுயாதீனமாக ஊடாடக்கூடியவளாக வும், காலத்துக்கேற்றகோலமென்று தன்னை அலங்காரஞ் செய்யக்கூடிய வளாகவும் இருந்தாற்போதுமென்று சொல்லித் திரிகிருர்களாமே; அப்படி யானல் எங்கள் பிள்ளை என்ன அழ கிற் குறைந்தவளா? ஆங்கிலம பேசத் தெரியாதவளா? நாலுபேர் கூடிய சபையிலே, சங்கத்திலே, கூட்டத் திலே தக்கபடி ஊடாடத் தெரியாத வளா? கொண்டான் குறிப்பறிந்து காலத்திற்குத்தக்க கோலமாய் நட ந்துகொள்ளத் தெரியாதவளா? இந்த வறுமையொன்று தவிர வேறு எங் கள் பிள்ளையிடத்தில் என்ன குறை கூறமுடியும்? இந்த வறுமைதானும் நிலையாக எங்களோடு நின்றுவிடப் போகிறதா? வறுமையுஞ் செல்வமுஞ் சகடக்கால்போல் மாறிமாறி வருமெ ன்று பெரியோர் சொல்லுவார்களே; ஏழையாயிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ? ஆனதால், நீரும் உம்முடன் கூடப்பிறந்த சகோ தரமென்றெண்ணி இந்தப் பிள்ளை யின் கருமத்திற் கொஞ்சம் முயற்சி செய்யவேண்டும்" என்றுள்.

### கையிற் பணமில்லாமல்...முடியாது!

தன் மனைவி அந்தநேரஞ் செய்த சின்னப் பிரசாரணத்தைப் பொறு மையோடு கேட்டுக்கொண்டிருந்த வேலாயுதன், புன்சிரிப்புச் செய்து, அவளையும முருகேசனையும் பார்த்து, "எங்களுடைய இந்தவூரிலே பிரசங் கஞ் செய்யும்போதும், பத்திரிகை யில் எழுதும்போதும் இன்னும் சம யம்வாய்க்கும்போதும்,இங்குள்ளவர் கள் அவர்களுள்ளும் வாலிபர்கள் "சாதிபேதம்பார்க்கக்கூடாது; சமய பேதத்தைப் பொருட்படுத்தவொண் ணுது; சீதனம் வாங்கும் தீய வழக் கத்தை அறவே தவிர்த்துவிடவேண் டும்; பெண்களுக்கு ஆண்களைக்காட் டிலும் கூடிய சுயாதீனம் கொடுக்க வேண்டியது முறையானலும், இப் போதைக்கு ஆண்களோடு ஒத்த சுயாதீனமாயினுங் கொடுக்கவேண் டும், பெண் நல்லாய்ப் படித்தவளாய் நவநாகரிகம் படைத்தவளாய்ப் பார்ப் பதற்கழகியாய் இக்காலத்தார்கொள் கைகளுக்கு ஏற்றவிதமாக ஊடாடக் கூடியவளாய் மாத்திரம் இருந்தாற் போதும்; சமையல்செய்யத் தெரியா விட்டாலும், வேலைக்காரனை, வேலைக் காரியை வைத்து ஆக்கிக்கொள்ள லாம்"என்று இப்படியெல்லாம் பேசு வார்கள், எழுதுவார்கள்; இப்படிப் பேசியும் எழுதியும் வம்பளக்குமிவர் கள் தாங்கள்விவாகஞ்செய்யவேண்டி வருங்காலத்தில், தாங்கள் அதுகாறும் பேசியஞாயங்களையெல்லாம் அறவே விட்டுவிட்டு, தங்கள் உத்தியோகத் திற்குத் தக்க சீதனந் தரத்தான் வேண்டுமென்பார்கள்: அந்தப்பெண் நல்ல குலங்குடியிற் பிறந்தவளாகட் டும், அழகிற் சிறந்தவளாகட்டும், கல்வியிலே தேர்ந்தவளாகட்டும், நல்ல குணமொழுக்கம பூண்டவளா கட்டும், அவைகளைப் பொருட்படுத் தாது தாங்கள் நல்ல சீதனந் தந்தாற் ருன்பெண்ணை ஏற்றுக்கொள்வோம்" என்பார்கள்; ஆனதால் என்ன நன் மைகளிருந்தாலும் பணமில்லாவிட் டால் எதனையும் நிறைவேற்ற முடி யாது: இதனை யறியாமலா ஒரு புல வர் வறுமையைக் குறித்து பின்வரு மாறு பாடியிருக்கிறார்:-

"மேலானசாதியி லுதித்தாலுமதிலென்ன
வேதவித்தை கற்றுமென்ன
மிக்கவத்நபமோடு சற்குணமிருந்தென்ன
மிதமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய ஞயென்ன
ஆசாரபான யிருந்துமென்ன
பார்மீது வீரமோடு ஞானவா ஞயென்ன
பாக்கிய மிலாதபோது
வாலாயமாய்ப்பெற்றதாயுஞ்சலித்திடுவள்
வந்தசுற்றமு மிகழுமே
மரியாதையில்லாம லனைவரும்பேசுவார்
மனைவியுந் தூறுசொல்வாள்
ஆலால முண்டகனி வாயனே! நேயனே!
அனகனே! அருமைமதவேள்
அநுதினமும்மனதினினை தருசதுரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே"

ஆனதால், தம்பி முருகேசு என் பெண்டாட்டிக்குமாத்திரமல்ல உமக் குஞ் சொல்லுகிறேன் கேளும், கை யிற் பணமில்லாமல் எந்தக் கருமத் தையும் நிறைவேற்ற முடியாதென் பது நிசம்" என்று சொன்னன்.

(வரும்)

# புகையிலை நிபுணர்!

## இவர் எங்கே போய்விட்டார்?

இற்றைக்குச் சில ஆண்டுகாலத் துக்கு முன் இலங்கையிலே, புகையி லைத் தொழிலை அபிவிருத்தி செய்ய வும், புகையிலையால் ஆக்கப்படும் சுரு ட்டுத் தொழிலை நன்னிலைப்படுத்தவும் ஓர் உத்தியோகத்தர் இங்கே இறக்கு மதியாக்கப்பட்டார். இவர் இங்கே வந்து இத்தனை ஆண்டுகாலமாயும், புகையிலைத் தொழிலோ, சுருட்டுத் தொழிலோ அபிவிருத்தியடைந்து விட்டதா?

இப்போது இந்தப் புகையிலை நிபு ணர், ஓர் மாகாணத்தில், விவசாய உத்தியோகத்தராக இருக்கிருர். இந்த உத்தியோகத்தைப் பார்ப்ப தற்கு இவ்வளவு பெருந்தொகைப் பணத்தில் இவரை இறக்குமதிசெய்ய வேண்டுமா? இந்த உத்தியோகத்த ருக்குக் கீழ் வேலை பார்த்த ஒருவர் தான் இப்போது புகையிலை நிபுண ராகப் போரதனையில் இருக்கிருர். அவருக்கு இந்தப் பதவியைக் கொ டுத்ததும் ஓர் அரசியற் சூட்சி என் றும் சொல்லப்படுகிறது. அவரு டைய சகோதரர் இருவர், ஐக்கிய தேசியக்கட்சி யாதரவில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அபேட் சகராக நிற்கின்றனர் என்ற ஓர் கதை பரவி வருகிறது.

விவசாயப்பகுதியின் மந்திரியான மிஸ்ரர் சேனநாயக்கா, இப்படியாகத் தான் ஞேன்றித் தர்பார் நடத்துவ தால்தான் இன்று இலங்கையின் விவசாயம் கேவலநிலைமையை எய்தி, எம் உணவுக்கு அந்நிய நாடுகளை எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறோம். இவர்தானும் விஷயங் களை அறியார்: அறிந்தவர்கள் சொல் லையுங் கேளார், தன் அரசியல் வேட் கையைத்தணிப்பதற்காக,இலங்கைப் பணத்தைப் பயன்றா விஷயங்களில் வாரிவாரி இறைக்கிருர் என்று விவ சாயப் பகுதியில் 15 ஆண்டு கால மாக ஓர் அதிகாரியாகக் கடமைபார் த்து, மிஸ்ரர் சேனநாயக்காவின் கொள்கையில் வெறுப்புக் கொண்டு பதவியை உதறித் தள்ளிவிட்டு விலகி யவரான கொழும்பு மிஸ்ரர் எஸ். ஜே. எப். பண்டாரநாயக்கா என்ப வர் "சேர்ச்லையிற்" பத்திரிகையில் எழுதுகிருர்.

### பிந்திய செய்தி

சிந்து, பாஞ்சாலம், எல்லைப்புறம் ஓர்புறமாகவும், வங்காளம், அசாம் இன்னேர்புறமாகவும், பாகிஸ்தான் ராஜ்யம் அமைக்கப்படல் வேண்டும். இந்த இரண்டு பாகங்களையும் இணை க்க வழி விட்டுக்கொடுக்கவேண்டும். இந்த நிபந்தனைகட் கிணங்கவே வேண்டும். இல்லையேல் ஆபத்துத் தான் என்று ஜின்ன ஓர் அறிக்கை விட்டிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ம் பக்கத் தொடர்ச்சி

# நான் பெற்ற இன்பம்

இங்கே நினைத்தற்குரித்தாகும். இன்னும், கனி கையிற் கிடைத்துவிட்டாலும், அதை உண்ணுவதற்கேற்ற ஒரு வன்மை அல்லது ஆற்றலும் பொருத்தமும் வேண்டும். தோலிருக்கச் சுளை விழுங்கிகளும், தோலோடு சுளை விழுங்கிகளும் மலிந்து காணும் இவ்வுலகில் தான் கொடுக்கப்போகும் கனியை விரும்புவார் மிகச் சிலரே இருப்பார் என்பதையும், அதை உண்ணுதற்குரியார் அதைவிடவும் மிகக் குறைந்தே இருப்பார் என்பதையும் நினைந்தே அப்பர் அடிகள் "உண்ணவும் வல்லிரே" என்றார்.

இவ்வருமைத் திருப்பாடலின் இரண்டாம் அடியில் மற்றொரு நயமும் காணப்படும். "கனிதந்தாற் கனியுண்ணவும் வல்லிரே" என்பதை இரட்டுற மொழிதலாகக் கொண்டு, வல்லிரே என்பதிலுள்ள ஏகாரத்தை வினாவாகக் கொள்ளாது தேற்றமாகக் கொண்டால், "உங்கள் மனம் ஈசனிடத்தில் கனி தந்தால், அதாவது, கனிந்து குறையுமேயானால் நீங்கள் இக்கனியை உண்ணும் உரம் அல்லது வலிமை பெறுவீர்கள்: பெற்று உண்ணுவீர்கள்" என்றும் கூறினதாகக் கொள்ளலாம். நெக்கு நெக்குருகி நினைப்பவர்க்கே இறைவன் அங்கைக்கனியாய் வந்து அருள் புரிதலான், அவ்வாறும் பொருள்படவே அப்பர் அழகுறப் பாடியுள்ளார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கனிந்த மனத்தாராய்க் கழல் தொழுவார்க்கே சிவபெருமான் அருள் புரிவார். இறைவன் கனிந்த மனத்திலே பழுக்கும் ஒரு கனி. கனிந்த மனத்துக் காதல் அடியரே அக்கனியை உண்ண வல்லார்; மனம் கனிவது அன்பினால். அவ்வன்பிலே விளைவது ஆரமுதக் கனியாகிய ஈசன், அன்பிற் கனிவது ஈசன். ஆதலின் அவ்வீசனையே கனி என்றார்.

தன் கைவந்த செம்பொருளின் தித்திக்கும் தேமதுரச்சுவை நோக்கியும், அன்பிற் கனிந்த அருள் நோக்கியும், சிறப்பு நோக்கியும், கேட்போர் செவிமனங்களைக் கவர எண்ணியும், கொடுத்து வாங்குதற்குரிமை பற்றியும் கனி என்றார், சிவநெறிச் சீர்மையை செப்புகின்றேன், கேளுங்கள் என்றால் ஒருவேளை செவிகளுக்கு ஏறாது போய்விடுமோ என்று அஞ்சியே, கனி தருகின்றேன் இதோ! என்று கரைகின்றார். கனி என்றால் மனிதர்கள் விரும்பிவரக்கூடும் என்று அவர் நினைத்தார். தான் விரும்பியடைந்த ஈசனிடத்துத் தன் வேட்கைப்பசிதணியும் வகையில் தான் நுகரும் இன்ப வளத்தையெல்லாம் எண்ணியும், அது மற்றவர்க்கும் எளிதிற் கைகூட வல்லது என்பதைத் தெரிவிக்கக் கருதியும், முதலிற் கனி என்றவர் பின்னர் ஈசன் எனும் கனி என்று விளக்கிக் கூறினார். ஆயின் அவர் தருவது கனியன்றோ எனின், கனிதான்; சிவக்கனி காண்பார்க்குக் கண்கொள்ளாக் காட்சி விருந்தளிக்கும்; நினைப்பார் மனத்து நிலையம் பூத்து மதுரிக்கும்; உண்ணவுண்ண உவட்டாச் சுவை பெருக்கும்; கமகமவென்று பரிமளித்து நாசி நைவரும்; அதைத் தீண்டுதல் பெற்றால் தீவிய உணர்ச்சி நல்கும்; அதன் பொருள் சேர் புகழைக் கேட்கக் கேட்க இன்பவுணர்ச்சிகள் கொள்ளை கொள்ளையாய் உள்ளத்திற் குவியும். இவ்வாறு கண்டு, கேட்டு, உற்று, மோந்து, உண்ண வல்லது அப்பர் மெய்ப்பொருள். அதனால் அதனைக் கனி என்றார். இறைவன் ஒருவமனில்லி. கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியன். ஆயினும் யாதாயினும் ஒருவாற்றான் நம்மையெல்லாம் உணர்த்தவேண்டி இங்குக் கனியாக உருவகிக்கப்பட்டான்.

ஆனால், இது எசற்றவர்க்கே இன்பம் பயப்பது: மாசற்றவர்க்கே மகிழ்ச்சி தருவது: தேசுற்றவர்க்கே தெவிட்டாவிருந்து மற்றொரு சிறப்பும் இக்கனிக்கு உண்டு. ஏனைக் கனிகளைக் காசுகொடுத்து வாங்கவேண்டும், ஆனால், இக்கனியோவெனில், காசற்றவர்க்கே களிப்பூட்ட வல்லது. ஆகவே, கனி எனினும் அதனைப் பிறர் ஏற்றுக்கொள்ளும் அருமைப்பாடு கருதியே "உண்ணவும் வல்லிரே" என்றார். தான் நுகர்ந்து மகிழ்ந்ததுபோல் பிறரும் தவிராது பெற்று மகிழவேண்டுமே: அவர்களுக்குக் கொடுத்து வையாது போகும்படி தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்லாகாதே; எங்கு ஒருவேளை மறுத்து விடுவார்களோ என்ற அவர் இதயத்துடிப்பு அப்படியே ஏங்கித் தவிப்பதை "உண்ணவும் வல்லிரே" என்ற சொற்றொடரில் தெற்றெனக் காணலாம் "இந்தக்கனியை நீங்கள் உண்ணலாம். ஆனால் உங்கள் மனம் முதலில் கனியவேண்டும்" என்று அழகாக அதை உண்ணும் வழியைக் காட்டும் திறன் போற்றி மகிழ்தற்பாலது.

அதனால் அவர் கனி தருகிறேன் என்றது பொய்யாகாது. மேலும் அப்பர் அடிகள் பொய் சொல்வாரா? திருக்குறளைக் கசடறக் கற்று அதன்படி நின்ற பெரியார் அவர். கனி போன்ற இனிய சொற்களையே சொல்லவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். "இனிய வுளவாக இன்னாத கூறல், கனியிருப்பக்காய் கவர்ந்தற்று." என்பது தமிழ்மறையன்றோ! அதனால் அப்பர் அடிகள் அதிகமான் ஔவைப் பிராட்டிக்கு நல்கிய நெல்லிக் கனியினும் மேலான, நிலையான, உயரிய ஈசன்எனும் கனி என்ற ஒன்றைப்பற்றியே சொல்லுகிறார்.

கனிதருகிறேன் வாருங்கள் என்று சொன்னாலும்கூட பலர் வராதிருத்தலும் கூடும். தங்களுக்கு உரிமையாகவுள்ள உண்டற்கினியகனிகளை விரும்பாமல் எத்தனைபேர், பிறருக்குச் சொந்தமான கொல்லையிலுள்ள எட்டிக்காயைத் திருடி அலைகிறார்கள்! அக்கள்வர்களில் தானும் ஒரு கள்வனாக ஒருகாலத்தில் திரிந்ததை நினைத்து நினைத்து அப்பர் அடிகள் பரிதவித்துள்ளார். தான் பிறக்கக் கொடுத்துவைத்த சிவநெறியை அதன் கைப்பொருள்போல் உதறிவிட்டுச் சமணர்குழாம் புகுந்து மயங்கித் தட்டுப்பட்டு நின்றதை நினைந்து வருந்தி, கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனானேன் என்று அவர் கதறும் நிலை கல்லையும் கரையச் செய்வதாகும்

"மெய்யெலாம் வெண்ணீறு
சண்ணித்த
மேனியான் தாள்தொழாதே
உய்யலாமென்றெண்ணி யுறி தூக்கி
யுழிதந்தென் னுள்ளம்விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக்
குயில்கூவ
மயிலாலு மாரூரரைக்
கையினாற் றொழாதொழிந்து
கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே"

[திருவருள் கொண்டு பாடலுற்ற இத்தெய்வமறைத் தேவாரப்பாடலில் சமண சமயத்தையும் சமணரையும் வெறுத்துப் பழித்து ஒதுக்கப் புகுந்த திருநாவுக்கரசர், முன்னோர் மொழியைப் பொன்னேபோற்போற்றிக்கொள்ளும் முறைமைக்கேற்ப, "கனியிருக்கக் காய் கவர்ந்தற்று" என்னும் திருக்குறள் அடியைப் பொதிந்து அமைக்கும் திறனை உற்று நோக்குவார்க்குத் திருவள்ளுவர் சமண மதத்தினராய் இருந்திருக்க முடியாது என்பது [illegible]]

வரும்

---

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ் வங்கி

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்,

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std.12 2-8—31 7-47) (F)

---

147,180,496 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களும், பானவகைகளும், புகையிலையும் 1947-ம் ஆண்டில் சித்திரை மாதம் முடிய இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டன.

அடுத்த பாராளுமன்றத் தேரிவின் போது. வாக்காளர் சென்று வாக்குச் சம்மதம் தெரிவிப்பதற்கு இலங்கையில் எல்லாமாக 2,300 இடங்கள் வகுக்கப்படுமாம்.

---

# இந்துசாதனம்

## ஆங்கில - தமிழ்ப் பிரசுரங்கள்

### பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

---

## விளம்பர மின்றேல் பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai. Jaffna. on Friday, May, 23, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org